**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| STC No. | : | 373/2023 |
| Name | : | Nagaraj |
| P.W. | : | 3 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.07.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மடத்துக்குளம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 04.8.2021ம் தேதி கொமரலிங்கம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது உயர் அதிகாரியின் உத்திரவுப்படி நான் மற்றும் முதல் நிலை காவலர் 1424 கார்த்திக் ராஜா, காவலர் 1147 மதுரை வீரன் ஆகியோர்கள் கொமரலிங்கம் காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளில் பாப்பான்குளம், சாமராயப்பட்டி, கொமரலிங்கம், கொழுமம் ஆகிய பகுதிகளில் கடை வீதி மற்றும் அரசு பள்ளிகளுக்கு எதிரே உள்ள பெட்டிக்கடை மற்றும் மளிகை கடைகளில் பீடி, சிகரெட் மற்றும் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்வது சம்மந்தமாக கண்காணிப்பில் இருந்த போது எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் ருத்திரபாளையம் அரசு பள்ளிக்கு எதிரே உள்ள சக்தி மளிகை கடையில் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக கடையில் இருந்த நபரை விசாரிக்க தான் தடை செய்யப்பட்ட புகையிலை விற்பதாக ஒப்புக்கொண்டவரை 20.40 மணிக்கு கைது செய்தும் தனது பெயர் ரமேஷ் குமார் த/பெ.உச்சிமகாளி என்றும் கூறியவரை விசாரணைக்கு பின்பு 21.00 மணிக்கு சாட்சிகள் யாரும் முன்வராததால்

உடனிருந்த கார்த்திக் ராஜா முதல் நிலைய காவலர் மற்றும் காவலர் மதுரை வீரன் ஆகியோர் முன்னிலையில் விற்பனைக்காக வைத்திருந்த 11 Hans பாக்கெட்டை ஆஜர் செய்ததை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினோம். 21.15 எதிரி மற்றும் சொத்துக்களை நிலையம் கொண்டு வந்து காவல் நிலைய குற்ற எண். 411/2021 ன் பிரிவுகள் 24(1) COTPA Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அசல் முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றததில் சமர்ப்பித்தும் அதன் ஒரு நகலை உயர் அதிகாரிகளின் பார்வைக்கும் வைத்தேன். 21.30 மணிக்கு அழித்தல் மகஜர் தயார் செய்து சாட்சிகள் யாரும் முன்வராததால் உடனிருந்த கார்த்திக் ராஜா முதல் நிலைய காவலர் மற்றும் காவலர் மதுரை வீரன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட 11 Hans பாக்கெட் அழிக்கப்பட்டது. **அழித்தல் மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் 21.45 மணிக்கு ஜாமீன்தாரர்கள் பழனிச்சாமி மற்றும் சக்திவேல் ஆகியோரின் ஜாமீனில் எதிரி விடுவிக்கப்பட்டார். அன்றைய தினமே குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) ஆஜர் எதிரி புகையிலை எதுவும் விற்கவில்லை என்றும் புள்ளி விவர கணக்கிற்காக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி கடையின் அருகே நிறைய கடை உள்ளது என்றால் சரிதான். கடைகளில் இருந்த யாரையும் சாட்சியாக போடவில்லை என்றால் அவர்கள் யாரும் சாட்சியாக இருக்க வரவில்லை. அழித்ததாக சொல்லப்படும் புகையிலையை புகைப்படம் எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்கள் தயார் செய்யப்பட்டது என்றும் அதனால் வேறு யாரும் சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்